**நான் உருவாக்க விரும்பும் விநோத மிதிவண்டி**

எழுவது முதல் விழுவது வரை அன்றாடம் நம் செயல்பாடுகளில் அறிவியலின் பயன்பாடு நீக்கமற நிறைந்திக்கிறது. இவற்றின் எண்ணிக்கை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக பல்கிக் கொண்டே செல்கிறது. புதிய ____________________ பார்க்கும்போதுதான் மக்கள் அதன் தேவையை உணர்கின்றனர் என்பது எனது கருத்தாகும். இதனையெல்லாம் சிந்தித்தவாரே அன்றிரவு எனக்கு தூக்கம் கொள்ளவில்லை. நான் எதிர்காலத்தில் என்ன சாதனைப் புரியப் போகிறேன் என்ற எண்ணம் என்னுள் ________________________ . நீண்ட நாளாக என் மனதில் நான் செதுக்கிய என்னுடைய __________________________________ உருவாக்கினால் எப்படி இருக்கும்....என்ற கற்பனைக் குதிரையை ________________ தட்டிவிட்டேன்.

நான் உருவாக்க விரும்பும் விநோத மிதிவண்டியின் பெயர் '____________________'. நான் உருவாக்கிய விநோத 'எடிசன்' மிதிவண்டிக்குப் பறக்கும் ஆற்றல் இருக்கும். எடிசனை _______________________ வடிவினில் உருவாக்குவேன். அதன் மேனி கண்ணாடி நுண்ணிழைகளால் பொருத்தப்பட்டிருக்கும். இதனால் அதன் உடல் உறுதியாகவும் இலகுவாகவும் இருக்கும். எடிசன் மிதிவண்டியில் பெருவிரல் விசை அழுக்கும் வசதியைக் கொண்டிருக்கும். இவ்விசையை அழுத்தியதுடன் எனது மிதிவண்டி செயல்பட தொடங்கும். எனது 'எடிசன்' மிதிவண்டி இரண்டு இறக்கைக்களை _________________________ கொண்டு அதிவேகமாக செல்லக்கூடியதாக இருக்கும். தற்போதைய காலக்கட்டத்தில் ____________________ வாகனங்கள் ஒன்றொடு ஒன்று பின்னிக் கொண்டு சாலை நெரிசலை உண்டாக்குகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு தான் நான் இவ்விநோத மிதிவண்டியை வடிவமைக்கின்றேன். இதனால் ஒருவர் ____________________ இடத்திற்கு சரியான நேரத்தில் சென்றடைய எனது 'எடிசன்' துணைபுரியும்.

அதுமட்டுமின்றி, எனது 'எடிசன்' மிதிவண்டி கேட்கும் ஆற்றல் தன்மையுடன் உருவாக்குவேன். இம்மிதிவண்டிக்கு 'ஜிபிஎஸ்' எனும் கருவியே தேவையில்லை. நாம் செல்லவிருக்கும் இடத்தைக் கூறினாலே அதனைக் ________________________ கொண்டு செல்ல வேண்டிய இடத்திற்குப் பாதுகாப்பாகவும் சுலபமாகவும் கொண்டு சேர்த்து விடும். இதனுடன் சேர்த்து வலவனிலா வானூர்தியையும் அதாவது ( 'ட்ரோன்' ) எனது 'எடிசன்' அமைப்பில் பொருத்திருப்பேன். இதற்கு காரணம் எனது 'எடிசன்' மிதிவண்டியில் பயணம்

*ஆக்கம் : ஷாமினி சந்திரன்*

LIVEWORKSHEETS

செய்யும் பொழுது வலவனிலா வானூர்தி ( 'ட்ரோன்' ) துணையுடன் இயற்கை அழகைப் பார்த்து ______________________ படியே உலாச் செல்லலாம். அதோடு இம்மிதிவண்டியைக் கொண்டு பால்வெளி விண்மீன் அண்டத்திற்குச் செல்லும் எனது______________________ நிறைவேற்றிக் கொள்வேன். பால்வெளி விண்மீன் அண்டத்தை எனது 'எடிசன்' படம் பிடித்து தரவுகளில் சேமித்து வைத்துக் கொள்ளும்.

விநோத நிறைந்திருக்கும் இம்மிதிவண்டியில் உருமாறும் ______________________ அடங்கியுள்ளது. அதனால், மிதிவண்டியை நிறுத்தி வைக்கும் பிரச்சனை ஏற்படாது. கடலுக்கடியில் செல்லும்பொழுதும் தன்னுடைய உடலை தேவைக்கேற்ப உருமாற்றிக் கொள்ளும். எடுத்துக்காட்டாக, கடலுக்கடியில் செல்லும் போது இறக்கையைக் ____________________ கண்ணாடி பேழையாக உருவெடுக்கும். ஆதலால், கடலுக்கடியில் உள்ள இயற்கை காட்சிகளையும் நாம் இரசிக்க முடியும்.

ஆஹா..நான் உருவாக்க விருக்கும் விநோத 'எடிசன்' மிதிவண்டி எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்யும் போதே இனிக்கிறதே!

***வெற்றி நிச்சயம், இது வேத சத்தியம் !!!***
***கொள்கை வெல்வதே, நான் கொண்ட லட்சியம் !!!***

என்ற பாடல் வரிக்கேற்ப அறிவியல் மற்றும் ______________________ பாடத்தில் சிறந்து விளங்கி, எதிர்காலத்தில் அனைவரும் பயன்பெற ஓர் ஆக்கமும் புத்தாக்கமும் பொருந்திய விநோத மிதிவண்டியை உருவாக்குவேன். என் இன்றைய ஆக்கச் சிந்தனையை நாளைய அறிவியல் உருவாக்கமாக்க இறைவனிடம் இறைஞ்சுவேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| விநோதமான மிதிவண்டியை | வண்ணத்துப்பூச்சி | உருவாக்கத்தைப் | | |
| அலைமோதியது | பொறிவியியல் | கிரகித்துக் | ஆசையும் | |
| இரசித்தப் | முடக்கி | சக்தியும் | குறிபிட்ட | எடிசன் |
| சாலையில் | விரித்து | என்னுள் | | |

*ஆக்கம் : ஷாமினி சந்திரன்*

LIVEWORKSHEETS